ஊர் திரும்பும் சைபேரிய வாத்தே நில்லு
உன்னோடு எங்கள் மண்ணின் கண்ணீரை எடுத்துச் செல்லு

தென்தமிழ் ஈழத்திலே சிலநாள் இருந்தாய்
திசை தோறும் தமிழ் வானம் கண்ணில் பறந்தாய் 2
செந்தமிழ் இனத்தையிங்கே புல்லும் பறுந்தாய்
சிங்களவன் வாழ்வதை நீ நேரில் அறிந்தாய் 2

ஊர் திரும்பும் சைபேரிய வாத்தே நில்லு
உன்னோடு எங்கள் மண்ணின் கண்ணீரை எடுத்துச் செல்லு

மணப்பந்தல் மீதினிலும் குண்டு வீழும்
மழலையின் தொட்டிலையும் சாவு சூழும் 2
பிணக்காடாய் ஆனை எங்கள் மண்ணை பாராய்
பிறர் அறிய வழி எல்லாம் இதை நீ கூறாய் 2

ஊர் திரும்பும் சைபேரிய வாத்தே நில்லு
உன்னோடு எங்கள் மண்ணின் கண்ணீரை எடுத்துச் செல்லு

பார் அணைக்கும் சிங்களவன் ஓடி ஓடி
பரப்பி வரும் பொய்கதைகள் கோடி கோடி 2
ஊரனைத்தும் நீ பறந்து உண்மை முழங்கு
ஊடைபட வேண்டும் எங்கள் கையின் விலங்கு 2

ஊர் திரும்பும் சைபேரிய வாத்தே நில்லு
உன்னோடு எங்கள் மண்ணின் கண்ணீரை எடுத்துச் செல்லு

இன்று நீ திரும்புகின்றாய் உன் தாய் நாடு
எரியுது பார் நெருப்பு இங்கே பறவை கூடு 2
நின்று நின்று செய்தி சொல்லி வாத்தே நீ போ
நேரில் வந்து எமக்குதவ யாரும் இல்லையோ 2

ஊர் திரும்பும் சைபேரிய வாத்தே நில்லு
உன்னோடு எங்கள் மண்ணின் கண்ணீரை எடுத்துச் செல்லு

இசைத்தட்டு : இது நெருப்பின் குரல்
அகம் கலையகம்